



ஓலை 117| ஓசை 240| ஏப்ரல் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



அன்பும் & அறனும்
உடைத்தாயின்
இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்
கெழுமையும் ஏமாப் புடைத்து

## பொருள்

ஒருவன் ஒரு பிறவியில் கற்ற கல்வி,
அவனுக்கு ஏழு பிறப்பிலும் - ஏழும் பிறவிதோறும்
கூடவே சென்று உதவும்

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa   www.aagaramuthala.com   aagaramuthala@gmail.com

## சேமம் புகினும் யாமத் துறங்கு!

பா வகை : இன்னிசைக் கலிவெண்பா




புத்துணர்வும் நித்தம் புறப்பட்டுப் பாடுபட்டே
எத்துணையோ இன்பமும் ஏற்றே அரணாகக்
காவலனாய் வாழ்வில் கனிந்தே புதையலுந்தான்
ஆவலுடன் பெற்றிடவே ஆற்றலினைக் கொண்டபோதும்
கண்மூடி நள்ளிரவில் கண்ணுறங்கா விட்டாலோ
எண்ணற்ற நோய்வந்தே இன்னுடலைத் தின்றிடும்
என்றுணர்ந்தே ஆழ்கடலும் இன்னுறக்கம் கொள்வதுபோல்
என்றென்றும் ஆய்ந்துறக்கம் ஏற்பதுவே நன்மையாகும்;
நள்ளிரவில் வானமது நல்லுறக்கம் கொள்வதாலே
வெள்ளைமனம் நல்லடக்கம் வேட்கையின்றிக் கொண்டிருக்கும்;
காடுமலை எங்கெங்கும் காற்றுந்தான் கண்ணுறங்கும்;
நாடுகிற வேட்கையாலே நற்செல்வம் பெற்றிருந்தும்
நல்லுறக்கம் கொள்ளாமல் நாள்தோறும் துன்புற்றால்
அல்லவைகள் ஊன்பெற்றே அன்றாடம் துன்பந்தான்
சூழ்ந்திடுமே; நெஞ்சில் துயர்சினமும் மேலோங்கும்;
ஆழ்ந்திருந்த நெஞ்சின் அடக்கம், அமைதியோடும்;
நிலையிலாமல் உள்ளமும் நித்தம் துடிக்கும்;
விலையிலா வாழ்வுந்தான் வீழ்ந்தே நிரையமாகும்;
ஊனுந்தான் சோர்ந்தே உணவையும் ஏற்காதே;
ஊனும் மனஉளைச்ச லுண்டாகி நோயேற்கும்;
மண்ணில் பகலோனும் மஞ்சளொளி வீசியே
கண்ணுறக்கம் கொள்வான் கனிந்திரவில்; அஃதாய்ப்
பகலில் உழைப்பதுபோல் பாங்காய் இரவில்
தகவா யுறங்கு தனித்து.




**இலக்கணக் குறிப்பு:**

இரண்டடிக்கோர் எதுகை பெற்று வரும். அடி தோறும் முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் மோனை அமையும். இரண்டிரண்டு அடிகளுக்கோர் தனிச் சொல் வராது. இயற்சீர் வெண்டளையும் வெண் சீர் வெண்டளையும் கலந்து வரும் சீருக்கு சீர் வெண்டளை பார்க்க வேண்டும். வெண்பாவில் ஈற்றடியில் சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்பாட்டில் முடியும். குற்றியலுகரம் பார்க்க வேண்டும். பதிமூன்று அடிகளுக்கு மேல் எத்தனை அடிகள் வேண்டுமானலும் எழுதுவதே கலிவெண்பாவாகும் . மற்ற வெண்பாக்கள் போன்ற வாய்பாலே பின்பற்ற வேண்டும்.

## இன்னிசை சிந்தியல்வெண்பா.

மண்ணிலே எந்நாளும்
மாண்புடன் வாழ்ந்திட
கண்ணய ராமல் கடமையை ஆற்றிட
அண்டி உழைத்தல் அணி.



## நேரிசை சிந்தியல் வெண்பா.

ஊக்கம் நிறைத்தே உழைத்தல் சிறப்பென
தூக்கம் விடுத்தே துவளாமல்-ஊக்கியே
ஆக்கத்தைத் தேடல் அறம்.

கவிஞர் செ. கலைவாணி

# வள்ளுவன் வழியில் நட

**பா வகை: இன்னிசைக் குளக வெண்பா**



**வாழ்வியல் கூறி வளமே அளித்திடும்
தாழ்விலா வாழ்வை தரையிலே தந்திடும்
சூழ்ந்திடும் தீதை சுழற்றி அடித்திடும்
ஆழ்ந்துமே கற்றால் அழகு**

**வள்ளுவம் காட்டும் வழியில் சென்றிடு
அள்ளக் குறைந்திடா ஆற்றலும் பெற்றிடே
உள்ளம் அதிலுமே உண்மையும் கொண்டிடு
கள்ளம் அகற்றிட கல்**

கவிஞர் விஜயலஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்



அகர முதல

6. கேமசரியார் இலம்பகம்



விசையின் மகன் நடந்து சென்றான்
மலைகொள் காட்டில் களிப்புடன் இருந்தான்
அலைசூழ் கடல்போல காடு தோன்றியது
கலைமகள் வாழும் அழகான காடு

ஆர்வமுடன் தழுவி பொருள் மாறினதும்,
அடுத்தவரை விரும்பிக் கூடும் பரத்தையர்
மலரில் தேன் வற்றியதும் இன்னொரு
மலர் தேடும் வண்டினை ரசித்தான்.

மலைச் சுனைகளில் நீராடி மகிழ்ந்தான்
நிலையான இறைவனை துதித்துப் பாடினான்
ஆபத்து நீங்க மக்கள் வழிபடுவார்கள்
தாபதர் வாழும் பள்ளியைச் சேர்ந்தான்

அங்கு உள்ள துறவிகளுடன் கற்றுத் தேர்ந்தான்
எங்கும் நிறைந்திருக்கும் அருகனைத் தொழுதான்
தங்கும் இடங்களில் இளைப்பு தீர்ந்தான்
சங்கு சுட்டாலும் வெண்மை தரும் .

அவ்விதம் இளைப்பாறி வந்தான் வைகறை
செவ்வியன் ஞானம் உண்மை அறிந்தான்
தெய்வ வழிபாட்டில் பொய்யின்றி கூறினான்
எவ்வுயிர் உய்யும் வகைகள் உணர்ந்தான்
(செவ்வியன் : நேர்மையுடையவன் )

பூத்துக் குலுங்கும் மலர்கள் வாசனை
சந்தனமும் அகிற்புகை நறுமணம் வீச
அது தக்க நாடென்னும் பெயருடையது
அதன் எல்லையை சீவகன் அடைந்தான்

அந்த நாட்டின் தலைநகர் கேமமாபுரம்
இந்த உலகிற்கு திலகமாக விளங்கும்
எந்த நாட்டவரக்கும் சுற்றுலாத் தலம்
சுந்தர மக்கள் வாழும் நகரம்

அரசனுக்கு நிகராக வாழும் வணிகன்
தரணி போற்றும் செல்வந்தனாக வாழ்பவன்
ஊருணி போல் மக்கள் வள்ளல்
பணிவான பெருந்தகை அவன் சுபத்திரன்

மனைவி நிப்புதி தவம் இருந்தாள்
தனக்கு மக்கட் செல்வம் வேண்டும்
நினைத்த மாதிரி மகள் பிறந்தாள்
அனைத்து உலகுக்கும் அழகு சுந்தரி

தலைநகரமே திருவிழாக் கோலம்
அலையென திரண்ட மக்கள் திரும்பினர்
தலையில் சுமந்து சென்றனர பரிசுகளுடன்
விலை மதிப்பற்றமகள் கேமசரி.

தொடரும்...

கவிஞர் ந. திருக்காமு

# கவிதையின் தாகம்

குடை பிடித்தபடி
எழுதிக் கொண்டிருக்கிறேன்
கவிதை.
வெய்யிலின் வெம்மை
கவிதையில் புகுந்திடாதிருக்க.

வெய்யில்
பிடித்திருப்பதாய்ச் சொல்கிறது
நானெழுதிய கவிதை.
வியர்த்துக் களைத்திடுவாய்
எனச் சொல்கிறேன்.

என் பேச்சைக் கேட்காது
அடம் பிடிக்கும் கவிதையை
அவிழ்த்து விடுகிறேன்.

ஆடிக்களைத்து
வெய்யிலின் வெம்மையில்
மூச்சிச்சிரைக்க வந்து
தாகத்தில் தவிப்பதாய்
முறையிடுகிறது
ஒரு தாயின் தவிப்போடு
பதற்றத்திலிருக்கும் என்னிடம்.



இப்போது
நான் எழுதி முடித்திருக்கும்
நதிக்கவிதையில் நீராடி
வெய்யிலின் வெம்மையையும்
தீராத தாகத்தையும்
தணித்துக் கொள்கிறது
அக்கவிதை.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# பண்புடைமை

## அதிகாரம் : 100



எல்லோர்க்கு மினிதாயிருப்போர்க்கு
பண்புடை நன்நெறியோடு.
சிறப்புடன் வாழ்தல்
எளிதென்பர் நூலோர்.

அன்புடைமையும் உயர்குடியின்
நல்தன்மையும் அமைந்திருத்தலாம்.
இவ்விரண்டும் பண்புடையோராய்
வாழ்தலுக்கான நல்வழியாம்.

உடலாலொத்திருத்தல் ஒப்புமையன்று
பொருந்தத்தக்க பண்பால்.
ஒத்திருத்தலே உண்மையில்
பண்புடைய ஒப்புமையாம்.

நீதியுடனறமும் விரும்பி
பிறர்க்கும் தமக்கும்.
பயன்படவாழும் நற்பண்பினை
இவ்வுலகோர் போற்றிப்புகழ்வர்.

பகடிக்காய் பிறரிகழ்தலும்
துன்பந்தருமென உணர்ந்து.
பிறரியல்பறிந்து நடப்போரிடத்து
பகைமையிலும் நற்பண்புளவாம்.

பண்புடையோரிடத்துப் பொருந்தியிருத்தலால்
பாருலகம் இயங்குதாம்.
அஃதில்லையெனில் பூமி
மண்புகுந் தழிந்திடுமாம்.

நன்மக்கட்குரிய பண்பிலாதோர்
அரத்திற்கொத்த கூரறிவுடையராயினும்.
ஓரறிவுடைய மரத்தை
ஒத்தோரே யாவர்.

நட்புகொள்ளா பகைஞரிடத்தும்
பண்புடையோராய் ஒழுகாமை.
அறிவுடைச் சான்றோர்க்கு
என்றும் இழுக்காம்.

பண்பிலாதாகி கலந்துபழகி
மகிழவியலார்க்கு இவ்வுலகம்.
ஒளியுடைய பகற்பொழுதிலும்
இருளில் இருப்பதற்கொப்பாம்.

பண்பிலாதோன் முன்வினையால்
பெற்றசெல்வம் நற்பசுவின்.
பால்வைத்தகலத்தின் குற்றத்தால்
சுவைகெட்டாற் போன்றதாம்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# விடியல் இல்லா

விடியல்இல்லாமல் பொழுது விடிந்தது
உள்ளம் ஒட்டாமல் உறவுகள் கூடியது
வறுமை வாழ்க்கை திறனில்லா வேந்து
ஓர்மை கனவுகள் ஒப்புரவு இல்லா உலகு
ஒப்பனை மன்றம் உதிரும் உப்புச் சொல்.



கவிஞர் செ. தமிழ் நேயன், தமிழ் நாடு

# காதல் பரிமாணம்



ஏதொரு வழியிலே உணர்வை
ஆக்ரமிக்க தொடங்கவே
செயல் நிலை மாறிடும்.

கண்களால் தேடி
உணர்வால் ஊர்ந்து
ஏமாற்றமாகும் எதிர்ப்பார்ப்பில்
துவண்டிட, தூண்டுமே.

ஊண் இன்றி
உறக்கம் இன்றி
மெய் அகன்ற நிலையில்
உணர்வோ வேறு உலகிலனை
காட்டிடுமே.

எதையோ நினைத்து சிரித்து
அதையே நினைத்து அழுது
அதனையே மெருகூட்டும்
எதிர்ப்பார்ப்பை கொடுத்து
தவிப்பாகி நிற்குமே.

உன்னைக்கண்டதும்
என்னை மறந்ததே
என் ஆயுளும் உன்னாலே நீளுதென
உளறல் வெளிப்படுமே.

கவிஞர் சஹீனாஸ் பேகம், முதலைப்பாளி (புத்தளம்)

# விதி வரைந்த கோலங்கள்



விதியின் கரங்களில்
வைக்கப்பட்ட புள்ளி
இல்லாத கோலங்கள்

பலரின் வாழ்வில் அழியாத
ஓவியங்களின் கற்பனை
பிம்பங்களாய்

வறுமையின் வாசலில்
நிறங்களின் நிர்வாணங்கள்
நிரந்தரமாய்

அழகியலின் கோலங்கள்
ஏழ்மையின் இல்லத்தில்
புள்ளிகளின் நிழல்களாய்

வண்ணங்களின் அழகாய்
தரையில் மிதி படும்
கோலங்களின் மௌனம்

இறுதிவரை நிச்சயம்
இல்லாத வாழ்க்கையின்
வரைபடங்களாய்

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# கடவுளும் கற்சிலையும்

காலில்லாதவன்
கையேந்தினான்
எதிரில் நிற்பவனை
கடவுளாய் நினைத்து.
அழுகுறலை கேக்காத
கடவுளும் கடந்து
சென்று கையேந்தி
நின்றது.
என்றும் அசையா
கற்சிலையைப் பார்த்து.



கவிஞர் சி. நாகசுடர், கூடங்குளம்

# தவிப்பு



முடிச்சொல் இல்லாத ஒரு தெரு
அதன் ஓரத்தில் சிற்றுணடிச்சாலை
மழைத்துளிகள் உதிரும் மாமரத்தின் கீழ்
வெள்ளைச் சுவரில் வண்ண ஓவியங்கள்
வெறுமையை நிரப்பி நிற்கின்றன.

அந்தியிலிருந்து பசியோடு வந்த
வயிற்றின் அதிர்வுகளை அடக்கி
ஏதுமில்லை என நானே என்னை மறுத்து
ஒரு மேசையில் உட்கார்ந்தேன்.

உணவு விரைவாய் தீர்ந்தது
ஆனால் என் எதிரில் மௌனமாய் ஒரு பார்வை.
பூனை ஒன்று, அதற்கும் பசி
மௌனத்தோடு அது என் அருகில் அமர்ந்தது.

வயிற்றுப் பசி தீர்ந்தாலும்
இதயம் காலியாகி விடுகிறது.
ஒரு சிறிய துண்டு ஊணினை
அதற்காக நான் வைக்க
அது கண்களை உயர்த்திப் பார்த்தது.

தனிமையில் உறுகிப் போன என் மனம்
அதன் பார்வையில் உருகியது.
தனித்திருக்கும் மனங்கள்
ஒருவருக்கு ஒருவர் அர்த்தம் தரும்
ஏதுமில்லை என்பதற்குள்!

கவிஞர் அதீபா ஹஸன், காத்தான்குடி

# தூரிகையின் மொழிகள்



தூவானம் சொட்டும்
தூரிகையின் மொழிகள்
சூழல் சுழற்றும்
சங்கமங்களின் வர்ணனைகளாய்

விழிகளால் கருவாகி
எழில்மிகு சிந்தனையால்
வெள்ளைக் காகிதத்தில்
அழகிய பிரசவங்களாய்

புன்னகை வதனத்தை
பூமொழியால் வரைந்து
புலக்காட்சி கூறும்
ஈரக் கசிவுகளாய்

வலிகளால் புதைந்த
இதயத்தின் கதவுகளைத்
திறந்து தூசுதட்ட
வலிதான ஆயுதமாய்

இருள்கள் மறந்த
இரவுகளின் சுருக்கங்களை
இலகுநடையில் நயத்திட நாம்
ஏந்தும் தூரிகையே

உன் துளிக் கண்ணீரின்
வலிமையால்த்தான்
கானலான நினைவுகளும்
புதுயுகம் காணுதே

எழுதுகோலின் ஏக்கங்கள் ஒருபோதும்
ஏமாறுவதில்லை
வரலாற்றையே மாற்றிடும்
சக்தியின் மறுவடிவம்

தூரிகைக்கு அழவும்
சிரிக்கவும் நகைக்கவும்
ஊமையாய் உலகோடு
உறவாடவும் முடியும்

கவிஞர் சேஹூ மொஹம்மது பெளாஸிரா, முஸ்லிம் ஹல்மில்லாவ, மதவாச்சி

# சற்றே தள்ளி நின்று

அவரவர்க்கு ஆயிரம் நியாயம்!
உங்கள் பார்வையில் அதுவே அநியாயம்!
ஏன் காட்டுக்கு போனான்?
ஏன் மனைவியை விட்டுவிட்டு போனான்?

ஏன் மறைந்திருந்து கொன்றான்?
ஏன் சந்தேகம் கொண்டான்?
ஏன் தீக்குளிக்க சொன்னான்?
கேள்விகளால் வேள்வி நடக்கிறது இங்கு!!



அவன் வாழ்க்கையை வாழ கூடுமோ?
அவன் நிலையில் நின்று பார்க்க தோனுமோ?
எல்லோர் கையிலும் ஒரு தராசு!
எல்லோர் மனதிலும் நீதி பரிபாலனம்!

கல்லாய் சமைந்தவளுக்கு ஒரு நியாயம்!
சமைத்தவனுக்கு ஒரு வாதம்!
கள்ளுண்டவனுக்கு எது நியாயம்?
கூடி நின்று பேசுவோர்க்கு கள்ளுண்ட மயக்கம்!

தூர நின்று தூற்றுவோரும்
தள்ளி நின்று கலங்குவோரும்
கூடி வாழும் கூட்டத்தில்
பால் எது? கள் எது? பார்த்தால் புரியுமோ?

நிறப்பிரிகை வாய்க்குமோ?
சுவைத்து பார்த்தால் அறியுமோ?
சுவைத்த பின் மயங்குமோ?
கள்ளில் மயங்கி நின்றால் நீதிதான் பிழைக்குமோ?

தூக்கி எறியுங்கள் துலாக் கோலை!
உற்று நோக்காதீர்! அடுத்தவர் வாழ்வை!
உணருங்கள்! இயலாதெனில்!
அடுத்த பிறவிவரை காத்திருங்கள்!

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு, திருச்சி

# கடற்கரைக் காதல்



காதல் என்ற காற்றோடு கலந்தேன்
கடற்கரை அலையோடு கதையும் பேசினேன்
இரவு நேரத்தில் இனிமையை இரசித்தேன்
நிலா வெளிச்சத்தில் நில்லாமல் நடந்தேன்
காற்றோடு நானும் காந்தம் ஆனேன்
உப்பு தண்ணீரும் உயிரைக் கொடுத்தது
மீனவக் காதலும் மீனவனோடு சேர்ந்தது
அல்லும் பகலும் அயராது  உழைத்தேன்
மணல் மேடுகளில் மயக்கம் அடைந்தேன்
ஓயாது அலைகளின் ஓசைக் கேட்டது
வேர்க்  கடலையோடு வேகம் ஆனேன்
பறவைகள் சத்தம் பந்தமாய் போனது
புல்லரித்த உடல் புயலால் தாக்கியது
இயற்கை அன்னையோடு இன்பம் கண்டேன்
தினம் பேசி திண்டாடிப் போனேன்
தண்ணீரில் பிறந்து தண்ணீருக்குள்ளே  வாழ்ந்தேன்
கண்ணீரும் விடையாய் கண்ணுக்குள்ளே நின்றது
அவளோடு நான் அழகில்  ஒன்றானேன்
மாயக்காரி இதயத்தில் மாயமாய் மறைந்தாள்
ஏனோ அச்சம் ஏக்கத்தோடு இருந்தேன்
மனம் வலித்தாலும் மகூதியை தேடினேன்
மாலைப் பொழுதும் மாதமும் ஓடின
கிறுக்கல்களும் கவிதையாய் கிறுக்கிப் போயின
கடற்கரைக் காதல் கண்ணியமானக் காதல்

கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம்

# அவலத்தில் மக்கள்

அவலத்தில் மக்கள்
அலங்கோலத்தில் தெருக்கள்

உள்ளங்கள் ஏங்குகின்றன
உரிமைகளைக் கோருகின்றன
உலகின் எப்பக்கமும்
உலவுகின்றன சஞ்சலங்கள்

ஏணிவைத்தே எட்டாத
இருவேறு பணிமனைகள்
உயர்ந்த தாழ்ந்த
மலைகளும் பள்ளத்தாக்குகளும்



உருண்டை பூமியில்
உண்டானவை எங்கனம்?
குடிநீர் இன்றி
உண்பதற்கு போதுமானவையன்றி

தவிக்கும் மனிதர்கள்
தவறா இழைத்தனர்?
தனி ஒருவனுக்கு
உணவில்லை எனில்

தவமிருக்க வேண்டுமோ
உயிரியல் வழிபாட்டிற்கு
ஏக்கங்களை எளிதில்
மறைத்துக் கொண்டு

அலைகள் அற்ற
கண்ணீர்க் கடலில்
தண்ணீரில் அழுகின்ற
மீனாய் தழுதழுத்தே

நெருப்பில் நெளியும்
துடிப்பில் புழுவாய்
வாழ்க்கையின் கடிவாளத்தில்
எந்தெந்த லகான்களோ?

அவலத்தில் மக்கள்
அலங்கோலத்தில் தெருக்கள்

கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

# உயிர்களின் உயிரே

உயிருக்கு மேலான உறவே
எங்கேயும் காணாத கனவே

தெரிந்தும் அறியாமலும்
என் உயிரில் வைத்து விட்டேன்
உன்னை என் மனதில் பூட்டி விட்டேன்



பேசாமல் திணறினேன்
திணறாமல் கண்ணில் பேசினேன்
நினைக்காமல் இருந்ததில்லை
உன் நினைவுக்கு எல்லையே இல்லை

உன் விரல்களும்
என் விரல்களாக சேர்ந்து ஓர் விரலா
என்றும் மாறாதது
உன் மேல் கொண்ட காதலா

சண்டையோ பிரிவோ
நம் உறவின் அன்பு பிரிக்காதே
நம் அன்பும் பிரியாதே.

ஆயிரம் ஆண்டுகள் போகலாம்
ஆனால் உன் மீது கொண்ட
நம் உறவின் அடையலாம் போகாதே

தொலைதூர உறவா
இல்லை தொலையாத உறவா

கவிஞர் ஷர்மிளா செந்தில் குமார்

# கவலை

வட்டம் ஒன்று போட்டுத்தான்
வாழ்க்கை ஒன்று வாழ்கிறேன்.
திட்டம் பலவும் திட்டியே
செய்யும் செயலை செய்கிறேன்.

குட்டை போன்ற மனதிலே
குழப்பம் வந்து குழப்புது
குழம்பிப் பின் தெளிகையில்
சுற்றம் கல்லை வீசிப்பார்க்குது.



கட்டம் போட்ட மனதிலே
கவலை வந்து நிறையிது
காட்டாற்று வெள்ளமாய்
விழிக்கதவு உடைந்து பரவுது.

கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# மூங்கிலே

மூங்கிலே
நீ மூலதனமாய் மாறியபோது
பந்தல்க்கால்
கைத்தடி
புல்லாங்குழல்
நீ மூலமாய் இருந்தபோது
அடர்வனம்
மூலதனமாய் நீ அழகுதான்
மூலமாய் இருந்தபோது நீ பேரழகு

கவிஞர் ஆதன் ஆரா, அருப்புக்கோட்டை

# தன் இல்ல பாராட்டு

அம்பலம் ஏறுவோர்க்கு கிடைக்கும்!
மனப்புகைச்சல் மறைத்து உரைக்கும்
தேன் துளி வார்த்தைகள்!
வான் உயர புகழ்!
கண்ணை மறைக்கும் புகழ் வெளிச்சம்!
கரம் ஓய கைதட்டல்!
வாய் சலிக்கப் பாராட்டு!
நிகராகுமோ; அவை எதுவும்
கரிப்பு சற்றும் கலவாத
தன் வீட்டின் மகிழ்விற்கும்,
கைப்பு சற்றும் சேராத
உற்றமும் சுற்றமும் ஏற்றும்
ஏற்றத்திற்கும், மதிப்பிற்கும், மேன்மைக்கும்.
தன்னில்ல பாயசம் அலாதி!



கவிஞர் சசிகலா விஸ்வநாதன், பெங்களூரு

# சகோதரி

விட்டுவிலகுகிற பந்தங்களுக்கு மத்தியில்
விட்டுக் கொடுக்காத பந்தமிது.
சொத்து நூறு சேர்த்ததில்லை
அவள் நான் சேர்த்து வைத்த சொத்து.



புலம்பி அழ மனைவிபோதும்
போற்றி அழ மக்கள் போதும்
என்னை சொல்லி அழ
தங்கை அவள் போதும்.

மறந்த நெஞ்சம் நினைப்பதுண்டு
நினைத்த நெஞ்சில் உண்மையுண்டு
நான் நினைப்பதற்கே
உன்னை மறப்பதா?
மறந்த பின்னே நினைப்பதா?
நினைவோ நிஜமோ
இரண்டிலும் தங்கையவள் தங்கமுகம்.

அவளுக்கு அண்ணனில்லை
என் போல் அண்ணன்
அவளுக்கில்லை
உன் போல் தங்கை
எந்த பிறவியிலும்
கிடைக்கப்போவதில்லை.

அள்ளி இரைத்த அன்பின் விதைகள்
அடி நெஞ்சின் இடுக்குகளில் மரமானது.
அதிலே நாங்கள் ஊஞ்சலாடுகிறோம்.

சில நேரம்
பேசாமல் இருப்பது கூட
பிரிவே எங்களுக்கு.

கவிஞர் கோ. டோன்குமார்

# மெல்லிசை வாசங்கள்

அடுப்படி சத்தம்
உருளும் பாத்திரங்கள்
உறவாடும் கைகள்
தண்ணீரின் சலசலப்பு
சத்தமின்றி முனுமுனுப்பும்
கேள்விகள் தொடரும்
வாய்மொழிக் கூற்றில்
வழக்கமாகும் வாக்குவாதம்
அழைப்பு மணியோசை
ஆசையோடு சற்றே பரபரப்பும்
எதிர்ப்பார்ப்பில் அலையும் விழிக்குள்
ஏகாந்தமாய் நுழையும்
மர்மப் புன்னகையும்
அழையாத ஆனந்தம் அந்திக்குள்
வந்தமரும்
அழகிய இல்லறத்தின் வாசல்
தோரணங்கள் அசையும்
மென்தென்றலின் மெல்லிசையில்
நாணக்குடைகள் பூப்பூக்கும்



கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# மீளாத் துயரில் இந்நாள்



நம் உறவின் வலிமை "நீ"
புரிதலில் கண்ட இனிமை "நான்".
வலிகண்ட இதயத்தின் மருந்து "நீ"
விழி நீரை மறைக்கும் சிரிப்பு "நான்".

உயிரில் கலந்திருக்கும் உறவு "நீ"
நீங்காத நெஞ்சில் நிழலென "நான்".
அழியாத நினைவுகளில் புதைந்தாய் "நீ"
கலையாத கனவுகளில் மூழ்கினேன் "நான்".

நினைவுகளின் சங்கமத்தில் "நீ"
நித்திரை யின் ஊர்வலத்தில் "நான்"
தொலை தூரம் பயணத்தில் முதலில் "நீ"
பின்னோக்கி வருவேன் துடிப்பில் "நான்"

நம் வாழ்க்கை பயணத்தில் ஜெர்ரி " நீ" டாம் " நான் "
நான் முன்னே செல்ல, செல்ல
பின்னே தொடர்ந்து வரும் உந்தன் நினைவுகள்.

பரிசாக தந்த மோதிரமும்
நெஞ்சில் சுமந்திருக்கும்
பொன் பதக்கமும்,
அழியாத மையினால் கரத்தில்

பதிந்த உந்தன் பெயரும்
நினைவுச் சின்னமாய் என்னிடம் தஞ்சம்.
நிழலின் அருமை வெயிலில்
நீண்ட பிரிவு தனிமையில்..

கணமும் உந்தன் நினைவுகள்
யுகமாய் பற்றி எரிய.
மீளாத் துயரில் வாடுகிறேன் நின்று
கைப் பிடித்த திருமணநாளில் இன்று.

கவிஞர் குணசுந்தரி சிவா, காஞ்சிபுரம்


# திருமாலை 11-15 (5)

இலங்கைக்கு. செல்லுதற்கு. அணைகட்ட, சாந்தமாக.
ராமபிரான் அணுகியக்கால் கடலதுவோ ஒத்துழைப்பு
நல்கவில்லை! சீற்றமொடு வில்லெடுக்க,வணங்கிட்டே
உடன்பட்டு வேண்டுவன ஆற்றியதே! அன்னவனாம்
அரங்கனவன் ! அரங்கவனவன் புகழ்பாடி புனிதராவோம்!
மாலவனின் அவதாரம் பற்பலவாம்! பெயர்களும்
எண்ணிலவே! செய்வதெலாம் பாவங்களே என்றாலும்,
பரிகாரம் அவன்நாமம் உணர்ந்திட்டோ உணராமல்,
ஒரேவொருமுறை பகர்ந்திட்டால் பாவமெலாம் தானழியும்!
லோகாயதம் தனில்மூழ்கி உழல்வதிலர்! ஆழ்வாரின்
வழிகாட்டல் ஈதாகும்! ஆழிசூழ்ந்த ஞாலமாந்தர்,
தேவர்கோன் அரங்கன்தன் நாமம்சொலி, புலன்வழிசேர்
நரகவாழ்வு நீங்கிட்டே புனிதராவோம் வண்டினத்து
ரீங்காரம் ,தோகைமயில் எழிலாட்டம் , கூடுமேகம்
குயில்கூவல் யாவும்சேர் சூழ்சோலை வாழரங்கர்
தேவர்நாயகன் பேர்சொல்லா மூடருக்கு சோறிடாதீர்!
நாய்கட்கே இடுமினென்பார் ஆழ்வாரே! ஆத்திகர்க்கு
புலப்படுவான்! நன்கிணைவான்! நாத்திகர்க்கோ புலப்படாதோன்!
நம்பினோர்கள் துயர்களைவோன்! ஆட்கொள்வான்! அரங்கத்தான்
என்றுரைப்பார் ஆழ்வாரே! பதினொன்று முதலாக
பதினைந்து ஈறாக ஐந்தறிந்தோம்!மற்றுமுள பதினாறு
நேர்தொடங்கி நாற்பத்து ஐந்துவரை தொடர்ந்திடுமே!




கவிஞர் கணக்காயன் (இ. சே. இராமன்)

# வாழ்க்கை



வாழ்க்கையின் தத்துவம் வாழ்வின் சிறப்பே
ஊழ்வினை நம்மை ஊன்றி சுற்றிடுமே
பிறப்பு முதலாய் பிஞ்சு உள்ளமும்
சிறப்பின் உறவை பஞ்சாய் தேடுதே

சேர்க்கையின் சொந்தம் சேர்ந்தே வந்திடும்
பார்வையில் எளிய பாசமும் தெரியுமே
தேவையும் நிறைந்த தேடுதல் உயர்வே
சேவையும் ஓடியே சேர்ந்தே வந்திடும்

பள்ளியின் நிகழ்வும் பலரது நினைவாமே
துள்ளியே விளையாடும் துணிவான பருவமே
கல்லூரி படிப்பில் கவனம் தேவையே
எல்லோரும் மகிழவே ஏட்டை முடிக்கணம்

பணமும் பொருளும் பகைமை வாழ்வாமே
குணமாய் சிறந்தால் குற்றமும் களையுமே
பணத்தால் வெல்லலாம் பண்படா இதயத்தை
குணமது உயர்வே குன்றின்மேல் விளக்காய்

தூக்கத்தை காண தூளியைத் தேடுதே
ஏக்கத்தைக் கூட்டி ஏளனம் பேசுதே
வறுமை வாழ்வ வளமை ஊற்றே
சிறுமை எண்ணி சிந்தை சோராதே

வெற்றியின் சின்னம் வென்றிடும் காலத்தை
கற்றிடும் மாண்பில் கணக்கின்றி சிறப்போம்
பெற்றிடும் பேறுகள் இனிதே கிடைத்தே
உற்றோர் துணையும் உறவில் ஓங்குமே

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

# விடியாத இரவுகள்



ஈடேறா கனவுகள் தொடர்ந்திருக்கும் காலம்வரை
விடியாத இரவுகள் வலிகளை மீட்டிநிற்கும்!
மௌனத்தின் மொழியில் மனம்பேசும் வார்த்தைகள்
கண்ணீராய் வெளிப்பட்டு கரைந்துருகிச் சென்றிடுமே!
என்னுடன் நீயிலா இரவுகள் எல்லாமே
யுகங்களாய் நீண்டு உன்வருகையைத் தேடிடுமே!
கடந்தகால நினைவலைகள் மனத்துள் மோதிடுமே!
சிரிப்பொலிகள், இரசித்த பாடல்கள், சுவாசித்த
நறுமணங்கள் கண்களுக்குள் காட்சிகளாய் ஓடுகையில்
கண்களைத் திறந்தால் கனவென்று உணர்கின்றேன்!
இருக்கின்ற போது உணராத உன்னருமை
பிரிவின் போதெல்லாம் பெரிதாய்த் தெரிகிறதே!
விரைவில் நீதிரும்ப வலிகள் மறைந்தோடும்!
விடிவுகாலம் எப்போது என்றேங்கித் தவிப்போர்க்கு
விடியாத இரவுகள் பெருஞ்சுமையாய்த் தோன்றிடுமே!
கடிமணம் கண்டோர்க்கு விடியாத இரவுகள்
ஈடிலா மகிழ்வளிக்கும்! இரவுகள் நீளினும்
விடியல்கள் மறையாது! கடினமான காலங்கள்
தொடர்ந்தென்றும் இருக்காது! மனத்திற்குள் ஒளிக்கீற்று
விடியலின் வருகை விரைவிலென உணர்த்திடுமே!
பிரியமானவரின் மறைவுத் துயரங்கள் விடியாத
இரவுகளில் இழையோடும் சோகங்கள்! நிசப்தங்கள்!
சிரித்த முகம் இங்குமங்கும் இருப்பதுபோல்
பிரமை! உரைத்த வார்த்தைகள் எனக்குள்
எதிரொலிக்கும்! இவையெலாம் மீண்டும் கிடைக்காது
என்றுணர்ந்தும், எங்கிருந்தோ எமை வழிநடத்த
என்பயணம் தொடர்ந்திருக்கும் என்றொரு நம்பிக்கை!
துடிப்புமிக்க இளைஞர்கள் சாதனைகள் புரிந்திடவே
விடியாத இரவுகள் விடியட்டும் விரைவினிலே!
நம்பிக்கை கொண்டோர்க்கு நற்பொழுதாய் விடியட்டும்!

கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

# வரமும்தவமும் நீயே!



பல்கலைகனவு கண்டு
பார்வாழநான் கண்டு
ஊர்மெச்சும் அழகதை நீவியக்க
அதைகண்டுநான்வியக்க
வரமும் தவமுமாய் அனைத்தும் நீயாகிட
வரனும் தாரமும்
அனைத்தும் நீயாகிட
முன்பின்செய்த நல்வினை தீவினை
எமை சேர்க்கும் என்று நான் கனாக்கண்டிட
கண்ணிமைக்கும் நொடியதில் நீ வெறுத்தாயே

என்னபாவம் செய்திங்கே
பிறந்தேனென்று தினம்தினம் எண்ணவைத்தாயே
என்உடலும்நீயானாய் உள்ளமும் நீயானாய்
மனமும் நீயானாய் - என்
மானமும் நீயானாய்
அனைத்துமே நீயானாய்
உனைநினைத்திங்கே தவித்திக்கும்
பாவிக்கு மறுவாழ்வு கோடாயோ

காதலைப்பூட்டிவைத்து மோதலை
வெளிக்காட்டும் உன்னை! எவ்வாறு கூறிடுவேன்!
காதலை வரம்பற்று வெளிக்காட்டிடும்
என்நிலையதை மாற்றிடுவேனா.
நீயும் மாற்றிடுவாயா.

உன்கரம்பற்றி மீண்டும்
உலகம் சுற்றும் நாளது கனவாகுமா.
உன் மனம் திரும்புமா
உன்சுவாசகாற்று என்னோடு கலக்குமா
என் கனவுகள் கரைசேருமா
என்வாழ்வது செழித்திடுமா.

ஏக்கத்தின்விளிப்பில் மீண்டும் பார்ப்போமா
கதைப்போமா
என்வரமும் தவமும்நீயே
என் உயிரினில் கலந்தஎன் உறவே

கவிஞர் இ. தேவர்மன், இலங்கை

# தலைநகரம்

நகரமாம் நகரம் சென்னை அழகின் சிகரம்
நாட்டின் தலை நகரம் நாகரிகத்தின் உச்சம்.
ஊரில் பல மொழி பேசும் மக்கள் உண்டு
ஆனாலும் தமிழை பலவாறு பேசுபவர்கள் சென்னையில் உண்டு.

ஏழிசை கானங்கள் இசைத்த சபாக்கள்
புகழீட்டிய பாடகர்கள் சென்னையிலேயே உண்டு
சென்னைக்கு அடையாளமாய் கானா பாடல் என
சென்னைக்கே சொந்த மென இசைக்கும் குழுக்கள் உண்டு.

உலகத்தில் புகழ் பெற்ற இரண்டாவது கடற்கரை மெரினா
சென்னையின் அடையாளத்தில் தலையாய ஒன்று.
அறிஞர்கள் கலைஞர்கள் தேச தலைவர்கள் என
அத்துணை பேருக்கும் அழகான சிலைகள் அமைந்திட்ட சாலைகள்.

கோடி சினிமா கலைஞர்களை உருவாக்கும் கோடம்பாக்கம்
சென்னையின் கனவு தேசம்.
கலைஞர்கள் கவிஞர்கள் படைப்பாளிகள்
எழுத்தாளர்கள் மையம் கொள்ளும் இடம்.

கல்லூரி சாலையாய் கல்லூரிக்கு சாலையாய்
அறிஞர்களை படிப்பாளிகளை உருவாக்கும் கல்லூரி
கோவில்கள் நிறைந்திட்ட சென்னையே ஒரு தேசம்.

சட்டத்தை அமல் படுத்தும் சட்டமன்றம்
நீதி நிலைநாட்டும் தலைமை காவல் அலுவலகம்
நீதிமன்றங்கள் ஆகச் சிறந்த நூல் நிலையங்கள்
சென்னையின் சிறப்பு.




சைவம் வைணவம் என புகழ் பெற்ற ஆலயங்கள்
அருள் வழங்கும் அற்புதங்கள்
சர்ச்சுகள் தர்காக்கள் புகழ்மிக்க மசூதிகள்
ஒற்றுமையின் சின்னங்கள்
இதுவே சென்னையின் அதிசயங்கள்.

அத்தனை சிறப்பும் அமையப்பெற்ற
கனவு தேசத்தின் கலங்கரை விளக்கம்
சென்னை என்னும் அதிசய நகரம்.

கவிஞர் ஜேபபி @ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# வருக வருக தமிழ்ப் புத்தாண்டே

சிங்காரமாய் வந்திடுவாய் சித்திரையே
வசந்தத்தை அள்ளித் தந்திடுவாய் வைகாசியே

ஆசையாய் வரத் துடிக்கும் ஆனியே
ஆர்வத்தைத் தூண்டிடும் ஆடியே

அள்ளித் தந்திடுவாய் நிம்மதியை ஆவணியே
புன்னகையுடன் வலம் வரும் புரட்டாசியே

ஐயம் களைந்து நேர்மை புகட்டும் ஐப்பசியே
கார்முகிலுடன் வலம் வருவாய் கார்த்திகையே

மாசில்லாது மலரத் துடிக்கும் மார்கழியே
தைத் திருநாளைக் கொண்டாடும் தை மாதமே

மகிழ்வை அள்ளித் தரப் போகும் மாசியே
பக்குவமாய் அடுத்த ஆண்டை
எதிர் நோக்கிட வைத்திடும் பங்குனியே




புதிய ஆண்டில் பூத்திடும் உங்களைப் போன்று
தீய எண்ணங்களை விடுத்து
புதிதாய் பிறப்பதில் எங்களுக்கும் மகிழ்வே

வருவாய் வருவாய் புது ஆண்டே
புத்தாக்கம் தந்து வசந்தத்தை அள்ளித் தந்திடுவாய் நீயே

அனைவருக்கும் இனிய தமிழ்ப் புத்தாண்டு நல் வாழ்த்துகள்

கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# ஓவியம்

கண்களால் கண்டு கையாலே தீட்டி காணப்பெறும் ஓவியம்.
சிற்பியின் கை வண்ணத்திலே செதுக்கியே
கண்டேனே பல சிற்பங்களிலே!

கண்டேனே கலை அழகையும்!
உன்னை வடித்த கலைஞன் யார், எங்கே என்று நீ சொல்வாயா?
ஓவியம் வரைந்த தூரிகையும், சிற்பம் வடித்த உளியும்
உன்னைக் கண்டு ஒழிந்து கொள்ளுமே!
பட்டை தீட்ட தீட்டத்தானே வைரம் ஜொலிக்கிறது .
குளிர் நிறைந்த மழை தூறலிலே

நனைந்த உன் மேனி அழகோ
என்னை மெய்சிலிர்க்க வைத்ததே!
உன்னை படைத்த அந்த பிரம்மனே வந்து
உன்னை பார்த்தாலே கிறங்கடித்தான் போவானே!



கண்ணாலே கவி பாடும் உன் நயனத்திலே
அழகான கனவை கண்டேனே!
அஜந்தாவும் எல்லோராவும் தோற்றுத்தான் போகுமே!

எத்தனை கலை அழகை
தினம் தினம் கனவிலே கண்டு ரசிக்கிறேன்.
நேரிலே வந்து தரிசனம் தர மாட்டாயா?

கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# சாதுமிரண்டால்

கொஞ்சம் திருத்திக் கொள்ளுங்கள்
மங்கை மென்மையானவள் என்ற தகவலை
பேறுக்காலத்தில் மிகவும் வலிமையானவள்
சமூகத்திலும் பணிப் பார்க்குமிடத்திலும் துணிவானவள்
சண்டையிடுவதில் கொடும்கோபக்காரி
பகைவரை எதிர்த்து நிற்பதில் போர்குணமுடையவள்
தீர்க்கமான முடிவு எடுப்பதில் உறுதியானவள்
தினமும் ஓய்வரியாமல் உழைப்பவள்
அன்பை கொடுப்பதில் பெரும் தொல்லைகாரி
கோவத்தில் தீபாய்ந்த நாச்சியார் போன்றவள்
இவள் தான் அன்பின் மிகுதியால் மென்மையானவள்



கவிஞர் முனைவர். அக. வீரவன்சாரா, சிதம்பரம்

# உயிர்களின் உறவு

அம்மாவின் கருவறையில்
அடுத்தடுத்து உருவாகி
இப்பிறவியில் இனிமையாய்
அன்பிலே தொடர்ந்திட்ட உறவு!



விட்டுக்கொடுத்தலின் பரிவு
இணக்கமாய் வாழ்ந்திடும் தெளிவு
அன்பாலே கட்டிய உறவு!

உறவென்ற உன்னதத்தின்
புனிதத்தை எடுத்தியம்பிடும்
இணைபிரியாத வாழ்நாள் உறவு!

என்றென்றும் நீடித்திருக்க
உயிர் உள்ளவரை தொடர்ந்திருக்கும் அன்பு!

கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# பூவுறங்குது

பூவுறங்குது பொழுதும்
உறங்குது நானுறங்கலையே
==================

வானத்து சக்களத்தி
மோகத்தை தூண்டுறா.
தேகம் குளிருது
துடிப்புல நடுங்குவது

வேகச் சுழிப்புல
வீம்புக்குப் போனியே!
சொல்லாத சேதியெல்லாம்
சுருக்குனு குத்துது

வெள்ளாவி வச்சதுபோல
ஊரெல்லாம் மணக்குது
பவுசா வந்து
பக்கத்துல நிக்கலியே!


முழுசா சாத்தாத
கொல்லைக் கதவு
உன்னோட நினைப்புல
ஊரெல்லாம் சிரிக்குது!

வெரசா வந்து
விசுக்குனு கட்டிக்க
பூவுறங்குது பொழுதும்
உறங்குது நானுறங்கலையே!



கவிஞர் யாழிசைசெல்வா

# அளவீட்டுக்குள் அத்தனையும்



விருப்பங்களையோ
வெறுப்புகளையோ
கொஞ்சம் அளவாகவே
காட்டிக்கொள்ளுங்கள்.

முடிந்தவரையில்
சிட்டிகை அளவிலேயே
முறைப்படுத்திக்கொள்ளுங்கள்

கணிக்க முடியாத கணக்குப்பிழைகள்
எவருக்கும் நிகழலாம்

எதிர்வரும் நாட்களில்
விரும்பியவர்களை
வெறுக்க நேரலாம்.
வெறுத்தவர்களை
விரும்ப நேரலாம்.

வரையறுத்து வெளிப்படுத்திய
வார்த்தைப்பயன்பாடுகள்
யதார்த்தமாய் நம்மை நகர்த்தி செல்ல
ஏதுவாக இருக்கலாம்.

காயத்தழும்போ
குற்ற உணர்ச்சியோ
கீறலாய் கூட நம்மை நெருங்காது.

கவிஞர் முனைவர். இரா. இராஜமோகன், அயன் குறிஞ்சிப்பாடி

# பழக்கம்

தொலைத்து விட்டேன்
என்பதை விட
காணவில்லை என்பதே
எங்கும் பிரதானமாக
கூறப்படுகிறது.



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# மாறாத ஏக்கத்தோடு பெண்ணொருத்தி

உடையாத உதிர முட்டை
உடைக்கும் சுழி குறியீடு
உயிர்க்கும் உயிர்

கல்லுக்குள் உயிர் படைத்தே
கானல் நீர் பயணம்
காத்திருப்பு சோதனை ஆனது

பல் ஆய்தம் சொல் பிடுங்கி
பாலைக்குள் நஞ்சிட்டு
பாழாய் போனது மனம்

கற்பனைக்கு காற்றடைத்து
கட்டிலில் போட்டுடைத்த
கட்டுகளால் வெற்றிடம்

குழாய் பாதை செல்லரித்து போக
குழவி ஏந்த வழியில்லை
குறுகெட்ட மானிடத்தால்.

புலவி தீர்த்து வந்தவனே
புழுவாய் நெகிழ்கிறான்
புழுதியை சமர் செய்கிறான்

அகதியாய் நாடு கடத்த
அசதியில் மனம் புழுங்க
அலைகிறேன் ஓவியமாய்



தரணியில் உயிர் பிழைக்க
தாரமாய் எத்தனிக்கும்
தாயாய் ஏக்கம்.

மாறாத ஏக்கத்தோடு
பெண்ணொருத்தி

கவிஞர் முனைவர் ச. அரியநாச்சியம்மாள், கோபிச்செட்டிப்பாளையம்

# அவள்கள் வந்து பின்பு

சோகங்கள் கூட வரங்கள்
ஆகிறது!
வானவில்லும் கைகள்
கோர்க்கிறது!
வண்ணங்கள் எல்லாம் அங்கத்தில்
சிரிக்கிறது!
வயது எல்லாம்
மறைக்கிறது!
வண்ணத்துப் பூச்சியாய்
பறக்கிறது! - மனது
உன்னோடு திளைக்கிற
போலது மட்டுமே!



கவிஞர் க. நிவேதா, பவித்திரம் (கரூர்)

## என்னதான்

எதிர்மனிதரின்
கோபம் கொண்ட மனநிலையாலும்

எதிர்ப்பார்த்தது
நடக்கவில்லை என்ற ஆவேசத்தாலும்
விரக்தியாலும்

அமில வார்த்தைகள்
கொட்டப்படும்போது

என்னதான்
நம் தகுதி தெரிந்தாலும்

நம்பிக்கை இழப்பையும்
மன வருத்தையும்
மன பதட்டத்தையும்
கண்ணில் இருந்து
வழியும் சூடான நீரையும்
தவிர்க்க இயலவில்லையே?

*************

## வகைவகையாய்

இது வேண்டும்
என்ற முயற்சியில்
வெற்றிதா

அது நடக்கக்கூடாது
என்ற எண்ணப்படி
நடத்தி காட்டு

இடைஞ்சல்கள் வந்தாலும்
சமாளிக்க வழிகள்காட்டு

தோல்வி வந்தாலும்
மீண்டுவர
முயற்சிக்க
நம்பிக்கை கொடு

இழப்பு ஏற்பட்டாலும்
அதைவிட பெரிதாய் கொடு

கஷ்டங்களும் ஏளனங்களும்
வசைமொழிகளும்
பரிசானாலும்
தாங்கிக்கொள்ளும்
ஆற்றலைகொடு

அங்கீகாரமும் பாராட்டும்
கிடைக்கையில்
அலட்டல் இல்லாத
மனதையும் புத்தியையும்
கொடு

எல்லாவற்றுக்கும்
முத்தாய்ப்பாய்
என்ன செய்வது என்றே
தெரியவில்லை
நல்வழிகாட்டு

என வகைவகையாய்
இறைவனிடத்து
மனம் உருகி
பிரார்த்தனை

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

# காதல் இல்லாக் காதல் ஹைக்கூக்கள்

காத்திருப்பில் எரியும்
நெருப்பை அணைக்கும்
உன் ஒற்றை முத்தம்
*

ஒற்றை நொடி தான்
வரலாறு ஆகிறது
நம் சந்திப்பு
*

இரும்பு கரும்பாகிறது
உன் அரவணைப்பில்
என்னை உயிரூட்டு
*

முத்த அரங்கேற்றம் வேண்டி
மனப்பீடம் விழித்திருக்கும்
வந்து தொடங்கிவை
*

சோகம் பிழியும் மனதை
சொர்க்கத்தில் நிறுத்துகிறாய்
சுகச்சொற்களில் தாலாட்டி
*

ஓர இதழ் அன்பிற்காக
நொடிக்கொருதரம்
என்னைக் கிள்ளுகிறேன்
*

நாளெல்லாம் பௌர்ணமி
நானே பார்க்கிறேன்
எனைப்பார்க்கும் உன் முகம்
*



கனவுகளைக் காட்டுகிறாய்
இதயத்தைத் தேடுகிறேன்
வார்த்தை அமுதூட்டு
*

வாசகங்கள் வேண்டுமாம்
இலக்கியம் கேட்கிறது
எனைப்பார் வந்து விழும்
*

இரவுகளின் நிசப்தம்
என்னைக் கொல்லும்
கனவுகளில் நீ காணாதபோது

கவிஞர் இளையவன் சிவா

# பஞ்சதன்

மணி பார்த்து பதில் சொல்லும்
வங்கி ஊழியர்கள்
சாரி சார் லஞ்ச் டைம்
***

தீண்டாமைக்கு
ஆமை போன்ற ஆயுள் போல
செத்து தொலய மாட்டுது
***

உண்மையில் நியாய விலை கடை
சாலையோர
பழைய புத்தக கடை
***


மூட்டை தூக்குபவன் முதுகில்
விரிந்து கிடக்கிறது
வறுமை
***

நெடிய க்கியூ
தடுப்பூசி
கடுப்பூசி
***

நாயை குளிப்பாட்டி
நடுவீட்டில் வைத்தேன்
தூங்கிவிட்டது
***

வெளிச்சத்தில் இருள் உள்ளது
இருளில் வண்ணம் உள்ளது
வண்ணத்தில் எண்ணம் உள்ளது
எண்ணத்தில் வாழ்க்கை உள்ளது
***

எனக்காய் ஒன்று உனக்காய் ஒன்று
இரண்டுமே ஒன்றென்றாலும் சரி
இரண்டுமே நாமென்றாலும் சரி
"குழந்தைகள்"
***



இந்த இடத்தில் அறைப்புள்ளி வர வேண்டும்
புள்ளியை பாதியாய் வெட்டி வைத்துள்ளேன்
தெரிகிறதா பாருங்கள்

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

# முகவரி தேடும் காற்று

அத்தியாயம் 6

உதவி செய்ய முடியுமா?

(புதினம்)



"என்ன அரசு உனக்கு உதவி செய்வதற்கு மும்பையே முன்னாலே வந்து நிற்கும். ம்...ம்... என்று சொல்... எத்தனையோ பாங்கிலிருந்து கியாரெண்டி கூட இல்லாமல் எத்தனைக் கோடி பணம் வேண்டுமென்றாலும் வாங்கித் தருகிறேன். ஆமாம் என்ன வியாபாரம் செய்வதாக உத்தேசம்?"

"இந்த மாதிரி பாங்க்... அது இதுவெல்லாம் என் அப்பா ஜே.கே. பெயருக்காக பணம் கொடுப்பார்கள். அதெல்லாம் வேண்டாமென்று தானே வெளியே வந்திருக்கிறேன். நீ உதவி செய்ய முடியுமா?"டீ வர, எடுத்து சுடச் சுட அருந்தியவாறு கேட்டான் தமிழரசு.

"ம்... கண்டிப்பாக... உன் கம்பெனிக்கு ஒரு போன் போட்டு பேசிக் கொள்ளட்டுமா?", "என் கம்பெனியா?" வாய் விட்டுச் சிரித்தான் அரசு. "டேய்.. எதுவும் வேண்டாம். சொந்தக் காலில் நின்று ஜெயித்துக் காட்டுகிறேன். என்று சொல்லி விட்டு வந்திருக்கிறேன். என் கம்பெனி என்கிறாய். அது எல்லாம் என் தந்தையின் ஜே.கே க்ரூப் ஆஃப் கம்பெனி. அதற்கும் இந்த அரசுக்கும் எந்தச் சம்மந்தமும் கிடையாது. ஏதோ உன் நண்பன் என்கிற முறையிலே வந்து கேட்க வந்தேன். உன்னால் முடியுமா? முடியாதா?"

"என்ன மாதிரி உதவ வேண்டும்?", "எனக்கு சின்ன வயதிலிருந்தே கப்பல் போக்கு வரத்தில் மிகவும் விருப்பமுண்டு. கப்பல் கம்பெனி... அல்லது அதைச் சார்ந்த பிரைட் ஃபார்வார்டிங் கம்பெனி ஏதாவது ஒன்று ஆரம்பிக்கலாம் என்று நினைக்கிறேன்."

"என்ன செலவாகும் அரசு?" , "ஐம்பதிலிருந்து எழுபது லட்சமாகும்.", "இவ்வளவு பெரிய பணம் வேண்டுமெனில் என் அப்பாவிடம் கேட்கவேண்டும். அவர் உடனே உன் அப்பாவிற்கு போன் பண்ணிக் கேட்பார்."

"ஆமாம்...சுந்தர், நீ ஒரு சரியான மரமண்டை. நானே என் தந்தையின் தயவிலோ, நேரடியாகவோ, மறைமுகமாகவோ அவருடைய பணத்தில் ஒரு காசுகூட இல்லாமல் பெரிய மனிதனாக மாறிக் காட்டத் துடித்துக் கொண்டிருக்கிறேன்... நீ என்னடாவென்றால்....

கவிஞர் இரஜகை நிலவன்

அத்தியாயம் 6

உதவி செய்ய முடியுமா?

(புதினம்)

"இதோ பார் சுந்தர். ஒரு சல்லிக் காசுகூட வேண்டாமென்று உதறிவிட்டு ரயிலுக்கு டிக்கெட் எடுக்க பணமில்லாமல், டிக்கெட்டில்லாமல் வசாயிலிருந்து காந்தவிலிக்கு வந்து அங்கிருந்து நடந்து வந்து உன்னைப் பார்த்து பேசிக்கொண்டிருக்கிறேன்.
"அதை முதலில் ஞாபகம் வைத்துக் கொள். இப்போது அடுத்த வேளைக்கென்ன செய்யப்போகிறேன் என்று தெரியாது. வெளியே போனால் நான் ஒன்றுமில்லாத இந்தியப் பிச்சைக்காரர்களில் ஒருவன்."

"இப்போது சொல்லு, எனக்கு உதவமுடியுமா? முடியாதா?" என்றான் தமிழரசு.

"ஏண்டா போக்கிரிமாதிரி பேசுகிறாய்?. உன் அப்பா சம்பாதித்து வைத்திருக்கின்ற சொத்து உனக்குப் பின்னால் பத்திருபது வாரிசுகள் இருந்து சாப்பிட்டாலும் ஒரு பகுதி கூட குறையாது. அதை விட்டு விட்டு என்னிடம் வந்து பணம் கேட்கிறாயே? இது உனக்கே நன்றாக இருக்கிறதா?"

"போய் அப்பாவிடம் நல்ல பிள்ளயாக சேர்ந்து இன்னும் பணத்தைப் பெருக்க வழிசெய். ஏன் இப்படி கெட்ட பையானாக என் காலில்... உன் காலில் என வீண் ஜம்பம் அடித்துக் கொண்டிருக்கிறாய்."
"சுந்தர் உன்னிடம் நான் வந்தது அறிவுரை கேட்க அல்ல. உரிமையோடு நண்பன் என்ற முறையில் உதவி கேட்க வந்தேன். நீ எனக்கு பணம் சும்மா தர வேண்டாம். வெளியே எத்தனை பைசா வட்டியோ அத்தோடு மொத்தமாக என் வியாபாரத்தில் நான் கொடிகட்டிப் பறக்கும் போது திருப்பி தந்து விடுகிறேன்" என்றான் தமிழரசு.

மெதுவாக சிரித்துக் கொண்ட சுந்தர் " நீ நினைக்கிற மாதிரி பிஸினஸ் ஒன்றும் அவ்வளவு எளிதான விஷயமில்லை. திமிங்கிலங்களும், யானைகளும் நிறைந்த உலகம். கொஞ்சம் அசந்தாய் என்றால் உன்னையும் சேர்த்து ஏப்பமிட்டு விட்டுப் போய் விடுவார்கள்." என்றான்.

"இப்போது என்னதான் சொல்ல வருகிறாய்?" "ஒழுங்காக உன் தந்தையின் வியாபாரத்திற்கு உதவியாக இரு."

'உன்னால் உதவி செய்ய முடியுமா? முடியாதா?", எதுவும் சொல்லாமல் உதட்டைப் பிதுக்கினான் சுந்தர்.உடனடியாக எழுந்து நடந்தான் அரசு.

கவிஞர் இரஜகை நிலவன்

# முகவரி தேடும் காற்று

அத்தியாயம் 6

உதவி செய்ய முடியுமா?

(புதினம்)

****************************************************************************

வாசுதேவன், தமிழரசு ரோட்டோரத்தில் தளர்வாக நடந்து போவதைப் பார்த்து விட்டுக் காரிலிருந்து இறங்கி "எங்கே போகிறாய் அரசு? ஏன் இவ்வளவு டல்லாக இருக்கிறாய்? கார் ரிப்பேராகி விட்டதா? எங்கேயாவது இறக்கி விடட்டுமா?" என்று கேட்டான்.

ரொம்பவும் களைப்பாக உணர்ந்த தமிழரசு "ஒன்றுமில்லை. என்னைக் காந்தவிலி ரெயில்வே ஸ்டேசனில் இறக்கி விட்டு விடு." என்றான்.

"ஏன்…கார் கொண்டு வரவில்லையா? வசாய்தானே போக வேண்டும். நானும் அங்கேதான் போகிறேன். உன்னையும் வீட்டிலே இறக்கி விட்டு விடுகிறேன்." என்றான் வாசு.

"சரி" என்றவன், வசாய் ரோட்டிற்கு திரும்பவும் எங்கே போவது? வீட்டிற்கு போக வேண்டு… அது இனி முடியாத விஷயம் என்பது தீர்மானமாகி விட்டது'

'அத்தை பத்மினி வீட்டிற்கும் போனால் அங்கே கண்டிப்பாக என்னை அழைத்துச் செல்ல அப்பாவின் நண்பர் பாபு வந்து அமர்ந்திருப்பார்.'



தொடரும்…

கவிஞர் இரஜகை நிலவன்

# பேராசிரியர் சாலை இளந்திரையன்

## கட்டுரை

### பிறப்பு:



திருநெல்வேலி மாவட்டம், களக்காட்டிற்கு அருகில் உள்ள சாலை நயினார் பள்ளிவாசல் என்னும் சிற்றூரில் வாழ்ந்து வந்த வ. இராமையா — அன்னலட்சுமி இணையருக்கு 06.09.1930 அன்று மகனாகப் பிறந்தார். இவரை இவர்தம் பாட்டி சொக்கன் எனச் செல்லப் பெயரிட்டு அழைப்பார். சாலை இளந்திரையனின் இயற்பெயர் வ. இரா. மகாலிங்கம் ஆகும். இவர்

### கல்வி:

சாலை இளந்திரையன் 1936 முதல் 1941 வரை களக்காட்டில் - தொடக்கப் பள்ளி. பின்னர் 1941 முதல் 1944 வரை டோணாவூரில் - நடுநிலைப் பள்ளி. 1944 முதல் 1947 வரை பாளையங்கோட்டை, தூய யோவான் உயர்நிலைப் பள்ளியில் பதினொன்றாம் வகுப்பு வரை பயின்றார். 1948 முதல் 1950 வரை சென்னை பச்சையப்பன் கல்லூரியில் இடைநிலை வகுப்பு. 1950 முதல் 1952 வரை சென்னை மாநிலக் கல்லூரியில் இளங்கலை பட்டம் . அதே கல்லூரியில் 1952 முதல் 1954 வரை முதுலை பட்டம். ஆய்வுக் கல்வி: 1954 சூலையில் சென்னை மாநிலக் கல்லூரியில் முதன் முறையாக தொடங்கப்பட்ட இலக்கிய முதுவர் பட்டத்திற்கான ஆய்வு வகுப்பில், பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரை நெறியாளராகக் கொண்டு ஆய்வு செய்து அப்பட்டத்தைப் பெற்றார். பின்னர் 1971ஆம் ஆண்டில் தமிழ்நாட்டுப் பழமொழிகள் என்னும் தலைப்பில் சென்னைப் பல்கலைக்கழகத்தில், முனைவர் பட்ட ஆய்வினை மேற்கொண்டு, மெய்யியல் முனைவர் பட்டம் பெற்றார்.

### திருமணம்:

சாலை இளந்திரையன் சென்னை மாநிலக் கல்லூரியில் பயின்ற பொழுது அங்கு கலை இளவர் (சிறப்பு) பட்டத்திற்காக விருதுநகரைச் சேர்ந்த கனகசவுந்தரி பயின்று வந்தார். சாலை இளந்திரையனும் கனகசவுந்தரியும் காதலித்தனர். கல்லூரிக் கல்வி முடிந்ததும் இருவரும் தத்தம் பெற்றோரின் ஒப்புதலோடு 1954 சூலை மாதம் விருதுநகரில் திருமணம் செய்துகொண்டார்.

**திரு அ. வில்சன், இதழாசிரியர்**

**பணி:**

1954 சூலை முதல் 1957 ஏப்ரல் வரை சென்னை மாநிலக் கல்லூரியின் தமிழ்த் துறையில் ஆசிரியர் பணியிடம் ஒன்று தற்காலிகமாக ஏற்பட்டது. 1957 ஆம் ஆண்டின் நடுவில் இந்திய ஒன்றிய அரசின் விளம்பர, தகவல் ஒலிபரப்புத் துறையில் மொழிபெயர்ப்பாளாரகப் பணியாற்றத் தொடங்கினார்.

1959 ஆம் ஆண்டில் தில்லிப் பல்கலைக் கழகத்தில் தமிழ்துறையில் விரிவுரையளராகப் பணியேற்றார். அப்பல்கலைக் கழகத்திலேயே 1972 ஆம் ஆண்டில் பேருரையாளராகவும் (Reader) 1983 ஆம் ஆண்டில் பேராசிரியராகவும் (Professor) பதவி உயர்வுபெற்றார். 1985 ஆம் ஆண்டில் விருப்ப ஓய்வுபெற்று தமிழகம் திரும்பினார். ஓய்விற்குப் பின் சென்னையில் சாலை அச்சகத்தை உருவாக்கி நடத்தினார்.

**படைப்புகள்:**

மாணவப் பருவத்திலேயே கதை, கவிதை, கட்டுரை என எழுத்துப்பணியில் ஈடுபட்ட சாலை இளந்திரையன் பின்வரும் நூல்களை எழுதியிருக்கிறார்.

- சாலை இளந்திரையன் கவிதைகள்
- உலகம் ஒரு குடும்பம் கட்டுரைகள்
- சிந்தனைக்கு கட்டுரைகள்
- அன்னை நீஆட வேண்டும் (கவிதைகள்)
- இரண்டு குரல்கள் (கட்டுரைகள்) (பேராசிரியர் முனைவர் சாலினி
- இளந்திரையனுடன் இணைந்து எழுதியது)
- சிலம்பின் சிறுநகை (கவிதைகள்)
- புரட்சிக் கவிஞரின் கவிதை வளம் திறனாய்வு
- தமிழ்க் கனிகள் (கட்டுரைகள்) (பேராசிரியர் முனைவர் சாலினி இளந்திரையனுடன் இணைந்து எழுதியது)
- காலநதி தீரத்திலே (கவிதைகள்)
- தமிழில் சிறுகதை (திறனாய்வு)
- புதிய தமிழ்க் கவிதை (திறனாய்வு)
- சிறுகதைச் செல்வம் (திறனாய்வு)
- தமிழனே தலைமகன் கட்டுரைகள் (பேராசிரியர் முனைவர் சாலினி இளந்திரையனுடன் இணைந்து எழுதியது)
- பூத்தது மானுடம் (கவிதைகள்)
- கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே (கவிதைகள்)
- Some Aspects of Modern Tamil Literature
- நேயப்பாட்டு (திறனாய்வு)
- தமிழுக்காக (கட்டுரைகள்)

# பேராசிரியர் சாலை இளந்திரையன்

## கட்டுரை

- எங்கள் காவியம் ❐ தமிழ் தந்த பெண்கள் (பேராசிரியர் முனைவர் சாலினி இளந்திரையனுடன் இணைந்து எழுதியது) ❐ புதுத்தமிழ் முன்னோடிகள் (திறனாய்வு) ❐ வீறுகள் ஆயிரம் (கவிதைகள்)
- சமுதாய நோக்கு (திறனாய்வு) ❐ கூட்டின் அமைதி குலைகிறது (கட்டுரைகள்) ❐ வெற்றி மலர்கள் (கட்டுரைகள்) ❐ எழுச்சி வேண்டும் (கட்டுரைகள்) ❐ நஞ்சருக்குப் பஞ்சணையோ? (கவிதைகள்)
- நம்மைப் பற்றிய சிந்தனைகள் ❐ காலத்தின் கேள்விகள்
- திருந்திய திருமணம் ❐ தமிழ் மாநாடு
- எங்கள் பயணங்கள் (பயணக் கட்டுரைகள்)
- உரைவீச்சு (1979ஆம் ஆண்டில் தமிழக அரசின் பரிசு பெற்றது)
- நடைகொண்ட படைவேழம் (கவிதைகள்) ❐ ஏன் இந்த மெத்தனம்?
- தமிழ்ப் பண்பாட்டுக்கு ஓர் இயக்கம் ❐ மக்கள் நாயக மரபுகள் (அரசியற் கட்டுரைகள்) ❐ உள்ளது உள்ளபடி (உரைவீச்சு) ❐ கேள்விகள் ஆயிரம் (கட்டுரைகள்) ❐ புரட்சி முழக்கம் திறனாய்வு (தமிழக அரசின் பரிசினைப் பெற்றது) ❐ காவல் துப்பாக்கி (உரைவீச்சு) 60 உரைவீச்சுகளின் தொகுப்பு
- அய்ந்தாவது தமிழ் மாநாடு ❐ ஒரு புதிய தமிழ் எழுச்சி
- வெடிப்புகள் உடைப்புகள் ❐ பொறுத்தது போதாதா?
- ஏழாயிரம் எரிமலைகள் ❐ நாளுக்கு நல்லபடி
- தமிழுக்காக ❐ ஓராசிரியர் பள்ளிகள் ❐ ஒரு மேல்சாதி நயவஞ்சகம்
- புதிய கல்விக்கொள்கை ❐ நெருப்பிலே மலர்ந்த தாய்மொழிப் பூக்கள்
- கணீரென்று வாழுங்கள் ❐ உரிமைகொண்ட தேசிய இனங்கள்
- இந்தியம் ஈழம் நச்சலியம் ❐ இப்படித்தான் வாழ வேண்டும்
- கூடங்குளம் கொதிக்கிறது ❐ அறுபதில் சில வீச்சுகள்
- நினய்வூட்டு ❐ மண்டல் குழு அறிக்கை ஒரு சமூகநீதி ஆவணம்
- நெருப்பை வளர்க்கிறார்கள் ❐ தமிழின் ஒரே கவிஞன் திறனாய்வு
- சொக்கன் கதை: ஒரு வணங்காமுடியின் கதை தன்வரலாறு
- தமிழ் தமிழன் தமிழ்நாடு (அரசியற் கட்டுரைகள்)
- ஈழத்துப் புலிகளுடன் 28 நாட்கள் (உரைவீச்சு)
- நாட்டிலும் ஏட்டிலும் தமிழர்கள் ❐ தாய் எழில் தமிழ் (கவிதைகள்)

2000-ல் சுடர் ஏந்திய தமிழ் மலர்கள் (வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரைகள்) வ.உ.சி., கவிமணி, பாரதிதாசன், கல்கி, திருவள்ளுவர், அறிஞர் அண்ணா ஆகியோரைப் பற்றி தில்லி தமிழ்ச் சங்கத்தின் சுடர் இதழில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு)

## கட்டுரை

இன்னும் தொகுக்கப்பட வேண்டிய கட்டுரைகள், கவிதைகள், கதைகள் என பல இருக்கின்றன.

**விருதுகள்:**

1991 ஆம் ஆண்டில் பாரதிதாசன் நூற்றாண்டு நிறைவு விழாவில் இவருக்கு பாரதிதாசன் விருது வழங்கப்பட்டது.

**மறைவு:**

நெஞ்சக நோயால் நீண்ட நாள்களாக அவதிப்பட்டு வந்த பண்முகப் பண்பாளர் 04.10.1998-ல் இயற்கை எய்தினார். அவரது விருப்பப்படியே அவரது உடல் சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ஆய்விற்காக அளிக்கப்பட்டது.

நன்றி
தினமணி





நாளை நமதே

# போராடி தோற்பதும்

# வெற்றிக்கு சமம்

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே முதலும் தமிழே


"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com